ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2135/42 - 2019 අගෝස්තු මස 06 වැනි අඟහරුවාදා - 2019.08.06
*2135/42 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

### அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியும், முப்படைகளின் முனைஞரும் ஆகிய எனக்களிக்கப்பட்ட தத்துவத்தின் மீது என்னால், இலங்கையில் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க, மனிதாபிமான நடவடிக்கைகளின் போது ஆற்றிய வீரமிக்க செயல், பாராட்டுமிக்க செயல்திறன் மற்றும் நல்கிய போற்றத்தகு சேவை என்பவற்றை கௌரவப்படுத்தி, அட்மிரல் வசன்த குமார் ஜயதேவ கரன்னாகோட (ஓய்வுபெற்ற), ஆர்எஸ்பீ வீஎஸ்வீ யுஎஸ்பீ பிஎச்டி எம்பீஏ எம்எஸ்சீ என்டீசீ பீஎஸ்சீ டிஜஎஸ்எஸ் இலங்கை கடற்படைத் தளபதியாக (2005 – 2009) அவர்களுக்கு கப்பல்குழாம் அட்மிரல் கௌரவமிக்க தரம் 2019, ஓகத்து மாதம் 05 ஆந் திகதி எனது கரங்களால் வழங்கப்படுகின்றது.*

மைத்திரிபால சிறிசேன,
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி.

*2019, ஓகத்து 05.*

---

### அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வு

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியும், முப்படைகளின் முனைஞரும் ஆகிய எனக்களிக்கப்பட்ட தத்துவத்தின் மீது என்னால், இலங்கையில் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கவும், மனிதாபிமான நடவடிக்கைகளின் போது ஆற்றிய வீரமிக்க செயல், பாராட்டுமிக்க செயல்திறன் மற்றும் நல்கிய போற்றத்தகு சேவை என்பவற்றை கௌரவப்படுத்தி, விமானப்படை சீப்(f) மார்ஷல் வெல்லாரச்சிகே தொன் ரொசான் மஹேஷ் ஜேம்ஸ் குணதிலக (ஓய்வுபெற்ற), ஆர்டப்பீ & பார் வீஎஸ்வீ யுஎஸ்பீ பிஎச்டி எப்ஜஎம் (இலங்கை) என்டீசி பீஎஸ்சீ இலங்கை கடற்படையின் தளபதியாக (2006 – 2011) அவர்களுக்கு விமானப்படை சீப்(f) மார்ஷல் கௌரவமிக்க தரம் 2019, ஓகத்து மாதம் 05 ஆம் திகதி எனது கரங்களால் வழங்கப்படுகின்றது.*

மைத்திரிபால சிறிசேன,
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி.

*2019, ஓகத்து 05.*

1A – G 30548 – 382 (2019/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.